# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**30/2019

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. ஆறுமுகம் | ஊர் | : | விளார் பைபாஸ் |
| த.பெ. | : | திரு.குப்புசாமி | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 54 | தொழில் | : | மண்டல துணை வட்டாட்சியர் |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் நாள் **வா.சா. 3 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். புல எண் 412/6 ஆனது 1986இல் உட்பிரிவாகியுள்ளது. அது ஆவணங்களின் அடிப்படையில் உட்பிரிவாகியுள்ளது. 412/6எ என்பது பிச்சையாஉடையாருக்கு பாத்தியப்பட்டது. அது 29.5 ஏர்ஸ். 412/6பி என்பது காசியம்மாள், சரஸ்வதியம்மாளுக்கு பாத்தியபட்ட 16.5 ஏர்ஸ் ஆகும். 412/6சி என்பது சுப்பம்மாள், தங்கபொண்ணம்மாள் பெயரில் 21ஏர்ஸ் உள்ளது. 412/6டி என்பது கோ.காசியம்மாள், சரஸ்வதியம்மாள் பெயரில் 5.5 ஏர்ஸ் உள்ளது. 412/6இ என்பது பிச்சையாஉடையார் என்பவர் பெயரில் 9 ஏர்ஸ் உள்ளது.

<u>4ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

மேற்படி அளவினங்கள் எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் நிலஅளவை மேம்பாட்டு திட்ட பதிவேடு. அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். 412/6சி என்பது நத்தம் பதிவேட்டில் யார் பெயரிலுள்ளது என்றால் சுப்பம்மாள், தங்கபொண்ணம்மாள் பெயரிலுள்ளது. அது எதில் உள்ளது என்றால் நத்தம் பதிவேடு அதன் நகலை தாக்கல் செய்யஇயலுமா என்றால் இயலும். பின்பு சுப்பம்மாள் பெயரிலிருந்து பழனிசாமி பெயருக்கு வருவாய்துறை நக.எண் 1698/2004 உத்தரவின்பேரில் 10.5 ஏர்ஸ் மாறியுள்ளது. 412/6சி சாமிநாதன் மனைவி உதயகுமாரி பெயரில் இருந்ததா என்றால் பதிவேட்டில் உள்ளது

அது ந.க எண் 426/2011 ன் அடிப்படையில் பெயர் நீக்கபட்டுள்ளது. தஞ்சாவூர் வட்டாட்சியர் ந.க எண் 38603/2013/அ8 நாள் 22.10.2013 உத்தரவின்பேரில் நீக்கபட்டுள்ளது என்றால் பதிவேட்டில் அவ்வாறு குறிப்பு இல்லை. ந.க எண் 426/11 ன் படி தான் உதயகுமாரி பெயர் நீக்கபட்டதா என்றால் ஆமாம். அந்த கோப்பு உள்ளதா என்றால் இது தொடர்பாக வேறு வழக்கிற்காக தேடி பார்த்ததில் கிடைக்கவில்லை. ஆவணங்கள் எது என்று குறிப்பாக எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை.

1ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.25 16:21:20 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**